DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 226/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : மாரியப்பன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th **June 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன காளியப்பன் எனது அப்பா. 2016ம் வருடம் நான் வேலைக்கு சென்றிருந்தேன். எனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் இறந்துவிட்டதாக எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தகவல் கேள்விப்பட்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்தேன். அவர் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து மட்டும பெற்றுக்கொண்டார்கள். அதில் எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. **புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.** பிரேத

பரிசோதனைக்கு பின்னர் நல்லடக்கம் செய்வதற்காக பிரேதத்தை பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலீசாரிடம் கொடுத்த புகார் மனுவில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்துகொண்ட ஆஜர் எதிரி Passion Pro இருசக்கரவாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிசென்று விபத்து ஏற்படுத்தியதாக கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 226/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : மாரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை:</u>

நான் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் சங்கரன்கோவில் நகராட்சியில் ஒப்பந்தத தொழிலாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன காளியப்பன் எனது ஊர்க்காரர். 2016 ம் வருடம் ஒருநாள் நான் திருவேங்கடம் ரோட்டில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது விபத்து நடந்ததாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு சங்கரன்கோவில் அரசு மருததுவமனை சென்றேன். ஆனார் காளியப்பனை பார்க்கமுடியவில்லை. மறுநாள் காளியப்பன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

16.03.2016 ம் தேதி மதியம் 1.15 மணிக்கு புதிய நகராட்சி அலுவலகத்திற்கு மேற்குபக்கம் உள்ள கழிவறை அருகில் பேசிக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த காளியப்பன் என்பவர் சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இடதுபுறமாக வந்துகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அப் போது அவருக்கு எதிரே Passion Pro இருசக்கரவாகனத்தை பின்னர் பெயர் விலாசம் கேட்டுதெரிந்துகொண்ட ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து காளியப்பன் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. காளியப்பன் என்பவருக்கு நாடி, குதிங்கால், வலதுகால் மூட்டு ஆகிய இடங்களில் காயம்பட்டு கிடந்தார் என்றும், சம்பவம் பற்றி காளியப்பன் மகன் மாரியப்பனுக்கு சின்னப்பாண்டி என்பவர் தகவல் சொன்னார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**